## *18. பரம்பொருள்.*

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**வா**ர்முந் நீர்வளை நிலனுழை நானன்
மனுவு டம்பெடுத் துங்கரி வலமாய்
ஆர்வ மல்கவந் துளநகர்க் கரிக்கு
மால வாய்க்கரிக் குருவிவெண் ணரைக்குஞ்
சீர்ம யேந்திரப் பள்ளியி னெலிக்குந்
திருவொ மாம்புலி யூர்ப்புலி தனக்கும்
பார்த னின்மிகக் கடையவ னானேன்
பரிவு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 1

**ப**ண்டைப் புண்ணியத் தானர னாமெய்
படைத்து மாணவி நாசிநற் கொடிக்கும்
இண்டை நீர்நிலை மல்கு மடானை
யீரத் துள்ளலுக் குந்திரு வாவூர்
வண்டி றேனுவுக் கும்புலிப் பாறை
வல்லி யத்தினுக் குங்கடை யாயுன்
தொண்ட னேனுளன் மேம்படு வானீ
தொடர்பு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 2

**எ**ம்பி ரானுனைக் கருத்துழி யிருத்தா
வேத்து நல்லுருப் படைத்துமிஞ் ஞான்றால்
உம்ப ரேத்தொரு கழுக்குவ டிருந்த
வுவணங் கட்கு நகேச்சுர வகிக்குஞ்
சம்பு கேச்சுரச் சிலம்பியும் பலுக்குந்
தகுதி ருந்து சுரன்குடி யசுவஞ்
செம்பொ னண்டினுக் குங்கடை யானேன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 3

---

1. **கரிவலமாய் ஆர்வமல்கவந்துள நகர்** = கரிவலம் வந்த நல்லூர்.
2. **அடானை** - ஆடானை. (திருவாடானை) **துள்ளல்** = யாடு.
3. **நகேச்சுரம்** - நாகேச்சுரம்; **அகி** = பாம்பு.
**திருந்து சுரன்குடி** = திருந்து தேவன்குடி; **சுரன்** = தேவன்.

**அ**ளப்பி லாற்றனன் குடைச்சிவ மாமுன்
னடிமை யாப்புட லேற்றுநெல் வேலிக்
களிற்றுக் குங்கவி னண்டச மதற்குங்
கரிலி லாத்திரு வான்மியஞ் சுரைக்கும்
நளிப்பொன் வாவிபல் கியதிரு வருணை
நாவிப் பிள்ளையென் பதற்கு மனேகந்
தளர்ச்சி சாற்றிட வுறுகடை யானேன்
றகவு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 4

**தெ**ய்வ ரத்தின மாமுனைப் பழிச்சோர்
திடமெய் யேற்றுமங் குரங்கணின் முட்ட
மைவ ணப்பர பிருதமை யணிற்கும்
வண்மை வலிவலக் கரிக்குரு விக்கும்
மெய்வ ளர்க்கு மிராகவ சேது
விரத வானரத் தினுக்குமொண் டனுக்குங்
கைவ ழுத்திடு கடையவ னானேன்
கருணை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 5

**க**ருணைச் சாகர மாமுனைக் கருதாக்
கதியொன் றேற்றுய்ய வுரியமெய் யேற்றுந்
தெருணட் பார்மயி லாடிடு துறையின்
சிந்து ரம்பரி கரங்குரங் கரவம்
இருணச் சாவிழிப் பூசைவள் ளொண்ட
னெருவை யங்கிளி யென்பவை கட்கோர்
திரணத் தாறுமொவ் வாக்கடை யானேன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 6

**எ**ண்ணு வார்திற னோர்ந்தவவ் விதமா
யெழுஞ்சிந் தாமணி யாமுனை யூழ்த்தா
நண்ணு மானவ வுருவெனக் கேய்ந்து
நாரை யூரெழி னாரையொன் றனுக்குந்

4. **வான்மி** = வான்மியூர், **சுரை** = பசு.
5. **பரபிருதம்** = காகம்; வடசொல்; **அமரஸிம்ஹங்** காண்க. **ஒண்டன்** = நரி.
6. **எருவை** = கழுகு.

திண்ண னாரருச் சித்தவொர் தலத்துச்
சிலம்பிக் குங்கரிக் கும்பண வகிக்கும்
மண்ணிற் கடையவ னாயிருக் கின்றேன்
மனது கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 7

**ந**றுஞ்சு காகரத் திருவுள மாமுன்
னாட்ட மிற்றென வுணருரு வேற்றும்
எறும்பி யூரிடை நுணுகெறும் பினுக்கு
மோர்சி றந்த வளங்கெழு வாவி
இறும்பு பம்புபைஞ் ஞீலியங் கதலி
யென்ற தாவரங் களுக்குமிக் கால்வன்
குறும்ப றாவொரு நான்கடை யானேன்
கொள்கை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 8

**ஆ**ர ணங்களு மளவிடற் கொண்ணா
வமல ஞானவிண் ணாய்விரிந் திடுமுன்
பூர ணந்தனை நேடொரு மதியைப்
பொருந்து மானுட யாக்கையை யேற்றும்
ஏரி ருந்தகொற் றவன்குடிக் கண்ணே
யிருந்த முள்ளியஞ் செடிக்குமிக் கானான்
சீரி றந்துள கடையவ னானேன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 9

**நி**ன்னை நாடவிஞ் ஞான்றக நீயே
நீட்ட வேற்றுள நான்முனர் வகுத்துச்
சொன்ன வல்விலங் கூர்வனம் பதகந்
துருமஞ் செடிகளுக் குங்கடை யாகி
இந்நி லத்திடை யிருக்குமென் கதியை
யென்னு ரைத்திட வெங்குக தேவே
வன்னி வெஞ்சிலைப் பெயரின னரசே
மனது கூர்ந்துகண் பார்பரம் பொருளே. 10

8. **இறும்பு** = தாமரைமலர். குறும்பு = பூசல் = போர்; **சே - திவாகரம்.**

10. **பதகம்** = பறவை. துருமம் = மரம்.